**செய்தி வெளியீடு**

**"தமிழர் தந்தை" சி.பா.ஆதித்தனார் அவர்களின்**
**117–வது பிறந்த நாள் விழா**

தமிழ் இதழியலின் முன்னோடியும், "தமிழர் தந்தை" என்று எல்லோராலும் அழைக்கப்படும் சி.பா. ஆதித்தனார் அவர்களின் 117–வது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னை எழும்பூர் இரயில் நிலையம் அருகில் அமைந்துள்ள அன்னாரின் திருவுருவச் சிலைக்கு நாளை (27.09.2021) காலை 10.00 மணியளவில், தமிழ்நாடு அரசின் சார்பில் மாண்புமிகு அமைச்சர் பெருமக்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் முக்கிய பிரமுகர்கள் ஆகியோர் பங்கேற்று மரியாதை செலுத்த உள்ளார்கள்.

சி.பா. ஆதித்தனார் அவர்கள் தூத்துக்குடி மாவட்டம் திருச்செந்தூர் அருகில் உள்ள காயாமொழி என்கிற கிராமத்தில் 1905ஆம் ஆண்டு பிறந்தார். மிகவும் செல்வச் செழிப்புமிக்க குடும்பத்தில் பிறந்து வெளிநாட்டில் சட்டப்படிப்பு முடித்து பாரிஸ்டர் பட்டம் பெற்றிருந்தாலும், சமுதாயப் பணிகளிலும் மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திட பத்திரிகையின் பங்கே முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை உணர்ந்திருந்தார். கல்லூரியில் படிக்கின்ற நாட்களிலேயே சிறு தொழில்கள் செய்து முன்னேறுவது குறித்து பல கட்டுரைகளும் நூல்களும் எழுதி உள்ளதோடு, தமிழ் இதழியலில் அவர் கொண்டிருந்த தணியாதத் தாகத்தின் காரணமாக, 1942 ஆம் ஆண்டு முதன்முதலாக 'மதுரை முரசு' என்ற வாரம் இருமுறை இதழையும், பின்னர் 'தமிழன்' என்ற வார இதழையும் தொடங்கினார். யாருக்கும் அஞ்சாமல் உண்மை செய்திகளை வெளியிட வேண்டும் என்கிற கொள்கைப்பிடிப்பின் காரணமாக, இவரது பத்திரிகையை ஆங்கில அரசு தடை செய்தும்கூட, தன் கொள்கையை மாற்றிக் கொள்ளாதவர்.

1942ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் மதுரையில் 'தினத்தந்தி' நாளிதழை வெளியிட்டார். தொடர்ந்து, 'மாலை மலர்' என்ற

மாலைப் பத்திரிகையையும் 'ராணி' என்ற வார இதழையும் தொடங்கினார்.

1947ஆம் ஆண்டில் 'தினத்தாள்', 'தினத்தூது' ஆகிய பத்திரிகை களையும் தொடங்கினார். எளிய சொற்கள், சிறிய வாக்கியங்கள், கவர்ந்திழுக்கும் தலைப்புகள், கருத்துப் படங்கள் உள்ளிட்ட உத்தி களைக் கையாண்டார். 'ஒரு படம் ஆயிரம் சொல்லுக்குச் சமம்' என்ற சீனப் பழமொழிக்கேற்ப, தனது நாளிதழில் ஏராளமான படங்களுடன் செய்திகளை வெளியிட்டு தனது தனித்துவத்தால் தமிழ் இதழியல் துறையில் உச்சம் தொட்டுள்ளார் என்றால் அது மிகையில்லை.

தமிழரசுக் கட்சி, நாம் தமிழர் இயக்கங்களைத் தொடங்கி தமிழ் மக்களின் வளர்ச்சிக்காகப் பாடுபட்டார். 1942ஆம் ஆண்டு முதல் 1953ஆம் ஆண்டு வரை தமிழக சட்டப்பேரவை மேலவை உறுப்பினர் ஆகவும், 1957 ஆம் ஆண்டு முதல் 1962 ஆம் ஆண்டு வரை சட்டப்பேரவை உறுப்பினராகவும், 1967ஆம் ஆண்டு பேரறிஞப் பெருந்தகை அண்ணா அவர்கள் முதலமைச்சராக பொறுப்பு ஏற்றிருந்த காலத்தில் சட்டமன்றப்பேரவை தலைவராக பணியாற்றிய போது சட்டப்பேரவை விதிகள் ஆங்கிலத்தில் இருப்பது பொருத்தமாக இருக்காது என்றதைத் தமிழில் மொழிபெயர்த்தவர் என்கின்ற பெருமைக்குரியவர். பின்னர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக பதவி வகித்த காலத்தில் 1969–ல் கூட்டுறவு மற்றும் விவசாய அமைச்சராகவும் திறம்பட பணியாற்றினார்.

தமிழ் மீதும், தமிழர் மீதும் மாறாதப் பற்று கொண்டு தன் வாழ்நாள் முழுவதும் செயல்பட்டதனால், அனைவராலும் "தமிழர் தந்தை" என அன்போடு அழைக்கப்படுகிறார். 1981ஆம் ஆண்டு மே திங்கள் 24 ஆம் நாள் தனது 76 வது வயதில் இயற்கை எய்தினார். அன்னாருடைய அருமைப் பெருமைகளை போற்றுகின்ற வகையில் அவரின் பிறந்த நாளானது அரசு விழாவாக அறிவிக்கப் பட்டு கொண்டாடப்பட்டு வருகிறது.

**********

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9